முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 448 /2019

04.01.2025 பி.வா.சா.1 திருமதி. தில்லை

4 ம் பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை

1. இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி கோமதி என்பவர் சைவ வெள்ளாலர் சமூகத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். குமரன் மற்றும் கோமதியின் கணவரும் அதே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் 3,4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது. எனக்கும் வாதிக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் இடையில் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். வாதி எனக்கும் 2 ம் பிரதிவாதிக்கும் சேர்த்து பரிகாரம் கோரி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் என் மகள் 2 ம் பிரதிவாதிக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். 2 ம் பிரதிவாதி பொள்ளாச்சியில் உள்ளார். தச்சநல்லூரில் மேல் அக்ரகாரம் கீழ் அக்ரகாரம் என்ற பெயரில் தான் தெருக்கள் உள்ளது என்றாலும் அக்ரகாரம் என்று தனியாக தெரு இல்லை என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதிக்கும் ஏ.எஸ். முருகன் என்பவருக்கும் 02.05.1969 ல் திருமணம் ஆனது என்றால் சரிதான். அந்த திருமணத்திற்கு நான் செல்லவில்லை. அந்த திருமணம் பற்றி எனக்கு தெரியாது. கோமதி என்பவருக்கு தச்சநல்லூர் தான். ஏ.எஸ்.முருகன் என்பர் மேல முன்னீர்பள்ளத்தில் வளந்தார் கணபதி மில்லில் வேலை கிடைத்தபிறகு தச்சநல்லூர் வந்தார். ஏ.எஸ்.முருகன் என்னுடைய தாய் மாமன்.

2. விருதுநகரில் உள்ள ரோச்சல் பட்டி கிராமத்தை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 பற்றி எனக்கு தெரியாது. வாதி என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தாரா என்றால் இல்லை என் வழக்கறிஞர் தான் அழைத்து வந்தார். என் வழக்கறிஞரின் அலுவலகம் எங்கு உள்ளது என்று எனக்கு மறந்துவிட்டது. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5 மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் மேலே கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.